# மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்

# அசல் வழக்கு எண்.19/14

2018 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03-ம் நாள் திங்கள் கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1 குணசேகர் என்பவரது குறுக்கு விசாரணை, திருமதி.ஆர்.யமுனாதேவி, பெஞ்ச் கிளர்க் கிரேடு -1 என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை 1வது பிரதிவாதி தரப்பில் தொடர்ச்சி**

2015ல் என் அப்பாவை நான் அடித்தது சம்பந்தமாக அரும்பாவூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 140/15, பதிவு செய்யபட்ட நிலுவையில் உள்ளதா என்றால் ஆம். என் அப்பா என்னை அடித்ததால் நான் திருப்பி அடித்தேன். என் அப்பா பெயரில் என்னை அடித்ததாக வழக்கு தாக்கல் செய்யபட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா பெயரில் நான் புகார் எதுவும் தரவில்லை. நான் வியாபாரம் செய்தது சம்பந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் செய்த நவதானிய வியாபாரத்திற்கு ஆவணங்கள் தரமாட்டார்கள். பேங்க் கணக்கு இல்லை. ஒரு பில் மட்டும் தாக்கல் செய்துள்ளேன். நான் அதுபோல பில் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தாத்தா ஊர் பவித்திரம். அந்த ஊரில் நான் 2ம் வகுப்பு வரை படித்தேன். மீண்டும் விஜயபுரத்தில் படிக்க வைத்தார்கள். 3ம் வகுப்பு வரை படித்தேன். நான் 5ம் வகுப்பு வரை படித்தேன் என்றால் சரியல்ல. அதன்பிறகு நான் தான் படிக்காமல் வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி சிவகுமார் 10ம் வகுப்பு வரை படித்தார் என்றால் சரி. அவர் அரசு பள்ளியில் படித்தார் என்றால் சரி. அரசாங்க பள்ளியில் படிப்பு இலவசம் என்றால் சரி. அந்த காலத்தில் யூனிபார்ம் முதல் நோட்டு புத்தகம் வரை வாங்கி தர வேண்டும். நான் தான் என் தம்பிக்கு துணிமணி, நோட்டு புத்தகம், சைக்கிள் வாங்கி கொடுத்தேன். அதுபோல நான் என் தம்பிக்கு நோட்டு புத்தகம் துணிமணி வாங்கி தரவில்லை என்றால் அதற்கு ஆதாரமில்லை என்பதால் அப்படி சொல்வார்கள். அந்த செலவுகளை 1ம் பிரதிவாதி தான் தந்தை என்ற முறையில் செய்தார் என்றால் தவறு. என் தந்தை ஊரை சுற்றி கொண்டு

இருந்தார். என் தம்பிக்கு ரூ.75,000/- நான் செலவு செய்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.23ன் படி கோனேரிபாளையத்தில் என் தம்பி பெயரில் வாங்கிய பிளாட்டை மற்றும் எனது பெயரில் வாங்கிய பிளாட்டை என் தம்பியின் பவர் முகவர் என்ற அடிப்படையில் சித்ரா என்பவருக்கு நான் கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரி. அந்த சொத்தை விற்றபோது 4ம் பிரதிவாதி வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரி. அந்த கிரைய பணத்தை நானே எடுத்து கொண்டு என்னுடைய ஊதாரி செலவுக்கு பயன்படுத்தி கொண்டேன் என்றால் தவறு. வடக்கு மாதவியில் கட்டபட்ட வீடு சிவகுமார் அனுப்பிய பணத்தை கொண்டு கட்டபட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.24ன் படி என் அப்பா 4ம் பிரதிவாதிக்கு தானம் செய்து கொடுத்த சொத்து 1ம் பிரதிவாதி மற்றும் 4ம் பிரதிவாதியின் பணத்தை கொண்டு வாங்கபட்டதால் 4ம் பிரதிவாதி பெயரில் தான செட்டில்மென்ட் செய்யபட்டது என்றால் தவறு. அந்த சொத்து பொது குடும்ப வருமானத்தை வைத்து பெரியவர் என்பதால் என் அப்பா பெயரில் வாங்கபட்டது. வா.சா.ஆ.25ன் படி 1ம் பிரதிவாதி அவருடைய சுய சொத்து என்பதால் 4ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியாகும். அந்த பத்திர பதிவுக்கு நான் ஆட்சேபணை செய்துள்ளேன். அந்த சொத்து 1ம் பிரதிவாதியின் சொந்த சொத்து அல்ல. அது பூர்வீக சொத்தாகும். வா.சா.ஆ.26 ஆவணம் அசோக் நகரில் உள்ள பிளாட்டுகள் 123,124,125 ஆகியவற்றை 1ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மென்ட் செய்த பத்திரம் என்றால் சரி. வா.சா.ஆ.27 அய்யர்பாளையத்தில் உள்ள வீட்டுக்குரிய வீட்டு வரி ரசீது ஆகும். அந்த வீடு உள்ள இடம் என் அப்பாவுக்கு கிராம மக்களுக்காக போராடியதற்காக புறம்போக்கு இடத்தில் கொடுக்கபட்டது என்றால் சரியல்ல. நான் பொது பணத்தில் காசு கொடுத்து வாங்கினேன். அந்த இடத்தில் என் அப்பா வீடு கட்டினார் என்றால் தவறு. நானும் வீடு கட்ட பணம் கொடுத்தேன். நான் அதுபோல எந்த தொகையும் தரவில்லை என்றாலும் அதுசம்பந்தமாக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் அதுபோல பணம் கொடுத்தேன் என்பதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆதாரம் எதுவுமில்லை. 2015ம் ஆண்டுக்கு முன்பு அந்த வீட்டிற்கு சின்னராஜி தான் வீட்டு வரி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதி அந்த வீட்டை விட்டு அடித்து துரத்தியபிறகு நான் வீட்டு வரி

செலுத்தி வருகிறேன் என்றால் தவறு. மேற்படி வீடும் பொது சொத்து என்று தான் நான் சொல்கிறேன். அய்யர்பாளையம் வீட்டை இந்த வழக்கில் வழக்கு சொத்தாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல சேர்த்துள்ளேன். அந்த சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல. குடும்பத்திற்கு 150 பவுன் நகை இருந்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நகையை அடமானம் வைத்து சொத்துக்களை வாங்கியதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் விவசாயம் செய்யவில்லை என்றாலும் எனக்கு எந்த தொழிலும் இல்லை என்றாலும் எனக்கு எந்த வகையான வருமானமும் இல்லை என்றாலும் வழக்கு சொத்துக்களை வாங்க என் வருமானத்தை வைத்து பணம் கொடுத்தேன் என்று இவ்வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி நான் அவருடைய மகன் என்பதால் கல்யாணமாகவில்லை என்பதாலும் எந்த வகையான வருமானமும் எனக்கு இல்லை என்பதாலும் ஊரில் உள்ளவர்கள் பஞ்சாயத்தில் சொன்னபடி இவ்வழக்கின் ஏ பட்டியல் சொத்தில் ஒரு பகுதியை அனுதாபத்தின் அடிப்படையில் எனக்கு தருவதற்கு முன் வந்தார் என்றாலும் நான் அதை பெற்று கொள்ள மறுத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. அவ்வாறு பஞ்சாயத்து பேசபட்டபோது ஊரில் நான் இல்லை. எனக்கு பாதகமாக பஞ்சாயத்து பேசபட்டதால் நான் ஒப்புகொள்ளவில்லை. எனக்கு தாவா சொத்தில் எந்த பாக உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என் தங்கைகளுக்கும் சொத்தில் பாக உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பி பட்டியல் சொத்து 4,5 பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்றாலும் அதை விற்பதற்கு அவர்களுக்கு உரிமையுள்ளது என்றால் தவறு. அந்த அடிப்படையில் 4ம் பிரதிவாதி 10,11 பிரதிவாதிகளுக்கு விற்றுள்ளார் என்றாலும் அதை கேள்வி கேட்க எனக்கு உரிமை இல்லை என்றாலும் தவறு. வழக்கு சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எவ்வித பாக உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.

**4,5,7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1வது பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளபட்ட குறுக்கு விசாரணை அப்படியே ஏற்றுகொள்ளபடுகிறது.